# திருமறை திறவுகோல்

## Bible Keys



Lesson 11 - 20

J.C. CHOATE (U.S.A.)

கிருபையுள்ள வார்த்தை, மதுரை

# திருமறை திறவுகோல்

## *Bible Keys*

பாகம் 2 - Part 2


எழுதியவர் :

**J.C. சோட்** *(USA)*



வெளியிடுவோர் :

**கிருபையுள்ள வார்த்தை, மதுரை.**

**BIBLE KEYS** (Tamil)
PART II : 11-20 Lessons
Copyright 2009 - Kirubaiyulla Varthai®

First Printing in Tamil : September 2009
Publisher : P.C. Philemon Rajah, M.A.,M.Th.,
(Director - J.C. School of Evangelism)

For Copies :

**J.C. SCHOOL OF EVANGELISM**
45 C/1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625010.
Ph: 0452 - 2607026, Cell: 92 4421 4421

## பொருளடக்கம்
## Contents


| | | பக்கம் |
|---|---|---|
| திறவுகோல் 11 | கேள்விப்படுதல் (Hearing) | 5 |
| திறவுகோல் 12 | விசுவாசம் (Faith) | 8 |
| திறவுகோல் 13 | மனந்திரும்புதல் (Repentance) | 11 |
| திறவுகோல் 14 | அறிக்கை (Confession) | 14 |
| திறவுகோல் 15 | திருமுழுக்கு (Baptism) | 17 |
| திறவுகோல் 16 | ஆராதனை நாள் (The Day of worship) | 21 |
| திறவுகோல் 17 | ஏற்றுக்கொள்ளப்படும் ஆராதனை (Acceptable worship) | 24 |
| திறவுகோல் 18 | வேத ஆராய்ச்சி (Bible Study) | 27 |
| திறவுகோல் 19 | ஜெபம் (Prayer) | 31 |
| திறவுகோல் 20 | பாடுதல் (Singing) | 34 |

## அஞ்சல் வழி பாடமாக இப்புத்தகத்தை பயன்படுத்துவோருக்கு சில வழிகாட்டல்கள்

திருமறைத் திறவுகோல்களின் கேள்வித் தாள்கள், தனியே கிழித்து எடுக்கும்படி இணைக்கப்பட்டுள்ளன. கேள்விகளுக்கான பதில்களை நிரப்பி, திருத்தி மதிப்பிடும்படி திருமறை ஆசிரியருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தயவு செய்து பதில்களை தெளிவாக எழுதவும்; அதேபோல் உங்கள் பெயர் மற்றும் முகவரியையும் ஒவ்வொரு பாடத்தின் விடைத் தாள்களிலும் எழுதினால் அது உங்களை அடையாளப்படுத்தி, திருத்தப்பட்டு மதிப்பெண்களுடன் உங்களுக்கு அனுப்ப ஏதுவாகும்.

இப்பயிற்சி மூலமாக நீங்கள் பெரிதும் பயன் பெறுவீர்கள் என்று ஜெபித்து, பயிற்சி பெறும் உங்களை வாழ்த்துகிறோம். உங்களுக்கு பாடத்தைக் குறித்த கேள்விகளோ, சந்தேகங்களோ, மேற்கொண்டு விளக்கங்களோ தேவையாயின், உங்கள் பயிற்சித் தாள்களைத் திருத்துகிற ஆசிரியர்களை தயவு செய்து தயக்கமின்றி தொடர்பு கொள்ளுங்கள். திருமறையின் திருவார்த்தைகளை கற்றுக் கடைபிடிப்பதால் உண்டாகும் ஆசீர்வாதம் உங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் நிலைத்திருப்பதாக.

**P.C. பிலேமோன் ராஜா**
(இயக்குனர் - J.C. சுவிசேஷப் பள்ளி)

# கேள்விப்படுதல் (Hearing)

ஒருவர் ஒரு கட்டுக்கதையை (வதந்தியை) கேள்விப்பட்டால், அதன் மீது நம்பிக்கை வைக்க முடியுமா? அதை அவர் சத்தியம் (அ) உண்மை என்று கூற இயலுமா? பதில், "இல்லை" என்பதே; ஆவிக்குரிய விஷயத்திலும் இதுவே உண்மை. நீங்கள் அநேக விஷயங்களை கேள்விப்படலாம்; ஆனால் அவை அனைத்தும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இல்லையெனில், அது உங்களுக்கோ மற்றவருக்கோ எந்த பயனும் தராது. உண்மையில், தவறை நம்புவது என்பது உங்களை, நித்தியத்தையே இழந்துவிடச் செய்யும்.

ஆரம்பமாக, நாம் எல்லாவற்றையும் பற்றிய சத்தியத்தை அறிய வேண்டும். தவறான செய்தி ஒருவருடைய காதுகளை தூண்டலாம். ஆனால் அது அவரை இரட்சிக்காது. நீங்கள் செய்ய நினைக்கும் காரியங்கள் அநேகம் இருக்கலாம். ஆனால் நீங்கள் சத்தியத்தினால் வழிநடத்தப்படும்வரை, உங்கள் செய்கையெல்லாம் வீண். சத்தியம் என்றால் என்ன? தேவனிடம் பேசும்போது கிறிஸ்து இவ்வாறு கூறினார், "*உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.*" (யோ. 17:17) ஆகையால், தேவன் பேசியவைகளே சத்தியம். மேலும் கிறிஸ்து கூறுகையில், "*சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்*" (யோ.8:32) என்றார்.

நீங்கள் மனிதர்களுக்கு அல்ல, மாறாக தேவனுக்கு, கிறிஸ்துவுக்கு, வேத வசனத்திற்கு செவி கொடுக்க வேண்டும். "*அவன் பேசுகையில். இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்*" (மத். 17:5) என்று தேவன் கூறினார். "*பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன். இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.*" (எபி. 1:1,2) என்றும் வாசிக்கின்றோம். பாருங்கள், ஒரு சமயம் தேவன் மோசேயுடனும், பின்பு தீர்க்கதரிசிகளிடமும் பேசியவர், இப்பொழுது கடைசி நாட்களில் தன் குமாரன்

மூலமாக பேசுகிறார். அப்படியானால் இயேசு இப்பொழுது நாம் கடைசி நாட்களில் தான் வாழ்கின்றோமா? (அப். 2:16,17). ஆம், கிறிஸ்துவின் மரணத்திற்கு பின் கடைசி காலமே. ஆகையால் நாம் கிறிஸ்துவுக்கே செவி கொடுக்க வேண்டும். எப்படி அவர் சொல்வதைக் கேட்பது? மெல்லிய சத்தத்தின் மூலமா? ஒரு தரிசனத்தின் மூலமா? மனிதர்களின் உபதேச கொள்கைகளை வாசிப்பதின் மூலமா? இல்லை! எழுதப்பட்டவைகளை ஏற்றுக் கொள்வதின் மூலமே! "***இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராதவேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.***" (யோ.20:30,31) என்று யோவான் எழுதுகின்றார்.

சத்தியத்தை கேள்விப்படுவதற்கு பல வழிகள் உண்டு. ஒருவர் வசனங்களை வாசிப்பதின் மூலம் கேள்விப்படலாம். மற்றொரு வார்த்தையில் சொன்னால், ஒருவர் பவுல், பேதுரு, யோவான் மற்றும் பிற திருமறை பிரசங்கியார்கள் கூறுவதை (வேத வசனங்களை) வாசிப்பதின் மூலமாகவோ, பிறர் தனக்கு வாசித்துக் காட்டுவதின் மூலமாகவோ கேள்விப்படலாம். அடுத்த நிலையில், ஒரு உண்மையான சுவிஷேச பிரசங்கியார் வேத வசனங்களை எடுத்து கூறுவதை கேட்பதின் மூலம், ஒருவர் ஆண்டவருடைய சித்தத்தை கேட்கலாம். ஆனாலும் கூட, அந்த பிரசங்கியார் கூறிவிட்டாரே என்பதினால் அவர் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. மாறாக, அவர் கூறியனவற்றையும் சத்தியம்தானா என வேத வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இதைத் தவிர, ஒருவர் இரட்சிப்பின் செய்தியை ஒரு சுவிஷேச கைப்பிரதி அல்லது வேதாகமம் சார்ந்த புத்தகங்களை வாசிப்பதின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சத்தியத்தை, அதாவது சத்தியத்தை மட்டுமே அறிந்து கொள்வதின் முக்கியத்துவத்தை உணர்ந்து கிறிஸ்து கூறுகையில், "***வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறைவைகளும் அவைகளே.***" (யோ.5:39). மேலும், பவுல் கூறுகையில், "***நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக***

*நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.*" (2 தீமோ.2:15) என்றார். தாங்கள் கேள்விப்பட்டவைகள் சத்தியம் தானா என்று ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கே பட்டணத்து மக்களைவிட பெரோயா பட்டணத்து மக்கள் நற்குணசாலிகளாய் இருந்தனர் என்றும் நாம் வாசிக்கின்றோம் (அப்.17:10,11).

புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு மனந்திரும்புதல் நிகழ்ச்சியிலும், ஜனங்கள் முதாவது தேவனுடைய சத்தியத்தை கேள்விப்பட வேண்டியிருந்தது என நீங்கள் காணலாம். சத்தியத்தை கேள்விப்பட்டதினால் அவர்கள் இருதயத்தில் விசுவாசம் உண்டாயிற்று. (ரோ. 10:17). இப்படித்தான் இன்றும் செய்யப்பட வேண்டும்.

கேட்க வேண்டியது முக்கியம் என்றாலும், ஒருவர் சரியானதை (சத்தியத்தை) கேள்விப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்வோம். மறுபடியும், "கேள்விப்படுவது" மட்டும் போதாது. அநேகர் சத்தியத்தை கேள்விப்பட்டுள்ளனர். ஆனாலும் ஒருவர் இரட்சிக்கப்படவில்லை. ஏன்? ஏனெனில் ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமெனில், அவர் கேள்விப்பட்ட சரியான சத்தியத்திற்கு கீழ்படியும் நடவடிக்கைகளை செய்ய வேண்டும். சில செயல்முறைகளை பின்பற்றினால், அரசாங்கம் கொடுக்கும் இலவச வீடு கிடைக்கும் என்று ஒருவர் கேள்விப்படலாம். ஆனால், அவர் அதற்கான செயல்களை செய்யாவிடில் அவருக்கு வீடு கிடைக்காது. ஒருவர் கிறிஸ்துவின் மூலமான இரட்சிப்பைப் பற்றி கேள்விப்பட்டாலும், அதை பயிற்சி செய்யாதவரை, அது அவருக்கு ஒரு நன்மையும் தராது.

கேள்விப்பட தீவிரமாக இருங்கள். ஆனாலும், கேள்விப்பட்டவைகளை பகுத்தறிய (வசனத்தின்படி) தவறாதீர்கள். ஏதோ நல்லதாக தோன்றுகிறதே என்பதற்காக ஒன்றை ஏற்றுக் கொள்ளாதீர்கள். கேள்விப்பட்டதை ஆராய்ந்து பாருங்கள். பின்பு அது சத்தியம் என்று நீங்கள் கண்டால், அதை ஏற்றுக் கொள்ளுங்கள், பொக்கிஷப்படுத்துங்கள் மற்றும் கீழ்படியுங்கள்.

# விசுவாசம் (Faith)

விசுவாம் என்றால் என்ன? "*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.*" (எபி. 11:1) என்று எபிரெய எழுத்தாளர் எழுதுகிறார். ஏவப்பட்ட எழுத்தாளர், இவ்வசனப் பகுதியை விசுவாசத்திற்கு விளக்கம் என்று எண்ணி எழுதாவிட்டாலும், நிச்சயமாக இது நமக்கு, "விசுவாசம் என்றால் என்ன?" என்பதற்கு சில யோசனை கொடுக்கின்றது. வசனத்தைக் கேட்பதினால் ஒருவருடைய இருதயத்தில் உருவாவதே விசுவாசம் (ரோ.10:17). அதாவது, விசுவாசமானது ஒருவரை, சந்தேகமில்லாமல் தேவ வார்த்தையின் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு, அதன் மீது அவர் கட்டுவித்து, கீழ்படிந்து, வரப்போகிறதை குறித்த நம்பிக்கையுடன் இருப்பதாகும்.

இதை விளக்கப்படுத்த நான் ஒரு உதாரணம் கூறுகிறேன்; அமெரிக்க தேசத்திற்கு ஜனாதிபதி ஒருவர் இருக்கிறார், டோக்கியோ மற்றும் ஜப்பான், எவரெஸ்ட் மலை சிகரம் ஆகியவை இருக்கிறது என்று நான் நம்புகின்றேன். ஜனாதிபதியையோ, இந்த இடங்களையோ நான் எப்பொழுதுமே பார்த்ததில்லை. ஆனாலும் அவை உண்டென்று நான் நம்புகின்றேன். ஏன்? ஏனென்றால், அவைகள் உண்டென்பதற்கான அநேக ஆதாரங்களினாலும், அவைகளை பார்த்தவர்களின் சாட்சிகளாலும், அவைகளைப் பற்றி அநேகர் எழுதியிருப்பதினாலும் தான். அதனால்தான் இவைகளின் மீது எனக்குள்ள நம்பிக்கையை நான் தயக்கமின்றி வெளிப்படுத்துகிறேன்.

நான் தேவனையோ கிறிஸ்துவையோ எப்பொழுதுமே பார்த்ததில்லை. நான் பரலோகத்திற்கும் போனதே இல்லை. ஆனால் தேவனும் கிறிஸ்துவும் வாழ்கிறார்கள் என்றும், ஒருநாளில் நீதிமான்கள் பரலோகம் செல்வார்கள் என்றும் நான் நம்புகின்றேன். ஏன்? ஏனென்றால், அவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கான அநேக ஆதாரங்களினாலும், கிறிஸ்து கொடுத்த சாட்சிகள் மற்றும் கிறிஸ்துவைப் பற்றிய அறிக்கைகள் மற்றும் இவர்களைப் பற்றி எழுதப்பட்டவைகள் ஆகியவற்றினாலேயே. அதனால் இந்த சத்தியத்தை மற்றவர்களுக்கு எந்த தயக்கமும் இன்றி கூறுகிறேன்.

இப்படிப்பட்ட விசுவாசம் நம்மிடம் தேவை. விசுவாசமில்லாமல் நாம் பரிதாபமான நிலையில் இருப்போம். நாம் எல்லாரும் எவர்மீதாவது,

எதன்மீதாவது நம்பிக்கை கொண்டுள்ளோம்; ஆகையால் முக்கியமான காரியம் என்னவென்றால், நம்முடைய விசுவாசம் சத்தியத்தின்மீது உண்டானதாகவும், சரியான பாதையில் அமைந்ததாகவும் உறுதிப்பட வேண்டும். ஏனென்றால், "*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.*"(எபி.11:6) என்று திருமறை கூறுகின்றது. இங்கே தயவுசெய்து கவனியுங்கள், ஒருவர் தேவனிடம் வரும் முன்பு முதலாவது, அவர் ஒருவர் இருக்கிறார் என்று நம்பவேண்டும்; இரண்டாவது, அவரைத் தேடுகிறவர்களை அவர் ஆசீர்வதித்து நன்மை செய்கிறார் என்று நம்ப வேண்டும்.

இயற்கையாக, விசுவாசம் என்பது இரட்சிப்பிற்கான ஒரு நிபந்தனை (அவசியம்) ஆகும். இது மட்டுமே அவசியம் இல்லை; மாறாக இது முதலில் தேவையான ஒன்று; ஏனெனில், ஒருவர் தேவனுடைய பிற கட்டளைகளுக்கு முதலில் விசுவாசம் இன்றி கீழ்படிய முடியாது. இவைகளை மனதில் கொண்டு, சுவிஷேசத்திற்கு கீழ்படியும்படி விசுவாசம் அல்லது நம்பிக்கையை வலியுறுத்தும் வசனங்கள் சிலவற்றைக் காண்போம்.

"*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.*" (யோ.3:16) என்று நாம் வாசிக்கின்றோம். சிறைச்சாலை அதிகாரி பவுலையும் சீலாவையும் பார்த்து, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபொழுது, வசனம் சொல்கிறது, "*அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி...*" (அப்.16:31). சிலர் உடனே என்ன முடிவிற்கு செல்கின்றனர் என்றால், ஒருவர் இரட்சிக்கப்படச் செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசிக்க வேண்டியது மட்டுமே என்று, நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஒருவர் கீழ்படியும் முன் விசுவாசிக்க வேண்டும்; மேலும் அப்.16–ஐ தொடர்ந்து நீங்கள் படித்தால், அந்த மக்களுக்கு தேவ வார்த்தை பிரசங்கிக்கப்பட்டது; மற்றும் அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர். ஆனால், ஆண்டவர் ஒருவரை எப்பொழுது இரட்சிக்கின்றார்? "*விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*" (மாற்கு 16:16) என்று கிறிஸ்து பதிலளிக்கிறார். திருமறை இரட்சிக்கும்படியாக சொன்னதை செய்ய நம்மை வழிநடத்தும்போதே,

விசுவாசம் அல்லது நம்பிக்கை இரட்சிக்கும்.

விசுவாசம் மட்டும் போதும் என்று வரும்போது, அது இரட்சிப்பதற்கு பதில் ஒருவரை தண்டனைக்குட்படுத்தும் என்று யாக்கோபு கூறுகிறார். "*அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.*"(யாக்.2:17) என்பதை கவனியுங்கள். மேலும், "*ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.*"(யாக்.2:24). "*நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.*" (யோ.14:15) என்று கிறிஸ்து கூறுகிறார். ஆகையால் விசுவாசம் மற்றும் கிரியைக்கான சரியான தொடர்பை நாம் புரிந்துகொள்ள வேண்டும். விசுவாசம் மட்டுமே நம்மை இரட்சிக்காது; அதேப்போல் கிரியை மட்டுமேயும் நம்மை இரட்சிக்காது (எபே. 2:8,9). இவை இரண்டையும் ஒன்றாக இணையுங்கள். அப்பொழுது இரட்சிப்பு உண்டாகும்.

விசுவாசமானது ஒருவரை பாவங்களிலிருந்து மனந்திரும்ப, கிறிஸ்துவே தேவ குமாரன் என்று அறிக்கை செய்ய, பின்பு பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற "வழிநடத்தும்" விசுவாசம் இதை மட்டுமே செய்யாது. மாறாக, அது ஒருவரை தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தேவனுடைய வார்த்தையின்படி நடக்கச் செய்யும்; மேலும் அவருக்கு நித்திய வாழ்விற்கான நம்பிக்கையைத் தரும். ஏன்? ஏனென்றால், எழுதப்பட்டவைகள் எல்லாம், நாம் விசுவாசிக்கும்படியாகவும், பின்பு அந்த சத்தியத்தின்படி நடந்து, தேவனுடைய ஆசீர்வாதங்கள் நம்மீது பொழியப் படும்படியாகவும் (யோ. 20:30,31; வெளி. 2:10) எழுதப்பட்டிருக்கிறது.

விசுவாசிப்பதற்கு பயப்படாதேயுங்கள். உங்கள் விசுவாசத்தை இலகுவாக்குங்கள். அதை கட்டுப்படுத்தாதீர்கள். அப்படிச் செய்யும் போது, அது உங்களுக்குச் செய்வனவற்றை பார்த்து ஆச்சர்யப்படுவீர்கள். "*கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.*" (ரோ. 1:16,17) என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கின்றோம் என்று திருமறையும் வெளிப்படுத்துகின்றது.

# மனந்திரும்புதல் (Repentance)

மனந்திரும்புதல் என்ற வார்த்தைக்கு ஒருவர் தன்னை முழுவதுமாக திரும்புவது, அதாவது மனதை மாற்றுவது ஆகும். இங்கு அதற்கு, பாவம் செய்வதை விட்டுவிடுதல் ஆகும். நிச்சயமாக, ஒருவர் தன் பாவங்களை விட்டுவிட்டு வாழ்வை மாற்றிக்கொள்ளாமல், ஆண்டவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாது.

"***அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே - கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்.***" (லூக். 13:3) என்று கிறிஸ்து எளிமையாக கூறினார். மற்றொரு வார்த்தையில் கூறினால் மனந்திரும்ப வேண்டும் அல்லது அழிய வேண்டும். அப்படியானால், ஒருவர் மனந்திரும்பினாலும், அழிந்தாலும் தேவன் கவலைப் படுவதில்லையா? இல்லை. தேவன் அக்கறைப்படுகின்றார். "***தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.***" (2 பேதுரு 3:9) என்று பேதுரு கூறுகிறார். யாராகிலும் அழிந்துபோக வேண்டும் என்று தேவன் விரும்பவில்லை; ஆனால் ஒருவர் மனந்திரும்ப மறுத்தால், அழிந்து போவார். ஆகையால், இது தனிநபரின் தேர்வைப் பொறுத்தது.

மார்ஸ் மேடையில் பேசுகையில், எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என தேவன் விரும்புவதை பவுல் தெளிவுபடுத்தினார். "***அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளை யிடுகிறார்.***" (அப்.17:30) என்று அவர் கூறினார்.

தேவன் தன்னை மனந்திரும்பும்படி கூறவில்லை என யார் ஒருவரும் கூறமுடியாது. ஏனெனில் அவர் தெளிவாக கூறியுள்ளார். இன்னும் அவர் அதை கட்டளையாக நம்மிடம் கூறியுள்ளார். நீங்கள் பொறுப்பை உணரும் வயதை எட்டினவர்களானால், அதாவது, சரி மற்றும் தவறை புரிந்துகொள்ளும் நிலையில் உள்ளவர்களானால் இந்த கட்டளைக்கு நீங்கள் உட்பட்டவர்கள்.

ஒருவர் தான் மனந்திரும்ப அவசியம் இல்லாதபடி மிகவும்

நல்லவராகவும், ஒருவர் தான் மனந்திரும்ப முடியாதபடி மிகவும் தீயவராகவும் இருக்க இயலாது. எல்லா மக்களும், அவர்கள் எப்படிப்பட்ட வாழ்வு வாழ்பவர்களானாலும், பாவம் செய்துள்ளனர்; மேலும் அவர்களுக்கு இரட்சிப்பு அவசியம். "*எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி...*" (ரோ. 3:23) என்று பவுல் கூறுகிறார். நாம் கிறிஸ்தவர்களாயினும், "*நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது.*" (1யோ.1:8) என்று யோவான் எழுதுகிறார். இதன் மூலம் கிறிஸ்தவர்கூட முழுமையாக பாவமில்லாமல் இல்லை. அவர்கள் கூட அறியாமை மற்றும் பெலவீனத்தினால் தவறிழைக்கவோ பாவம்செய்யவோ கூடும். அப்படிப்பட்ட நிலையில், "*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*" (1 யோ.1:9) என்று யோவான் மேலும் எழுதுகின்றார்.

இந்த குறிப்பிட்ட பாடத்தில் நாம், கிறிஸ்தவர்களைப் பற்றிக் குறிப்பாகப் பார்க்காமல், இரட்சிக்கப்பட ஒரு பாவி என்ன செய்ய வேண்டும் என்று பார்க்கிறோம். அதில் நாம், அவர் தேவன் மீது விசுவாசம் வைத்தவுடன் தன்னுடைய பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும் என பார்க்கிறோம். முந்தைய பாடங்களில் நாம், ஒருவர் சத்தியத்தை கேட்டு, பின்பு அந்த சத்தியத்தை நம்ப (விசுவாசிக்க) வேண்டும் என்று பார்த்தோம்; மேலும் வரவிருக்கும் பாடங்களில் அவன் கிறிஸ்துவை அறிக்கை செய்து ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற வேண்டும் என காண உள்ளோம். ஆனால் இப்பொழுது, அதாவது மேற்கூறிய நான்கு செயல்கட்கும் சரியாக நடுவில் அவன் மனந்திரும்ப வேண்டும். உதாரணமாக, பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்த மக்களிடம் பேதுரு, சரியாக இதைத்தான் கூறினார். "*பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.*" (அப். 2:38). இன்னொரு கூட்ட மக்களிடம் அவர், "*ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்...*" (அப்.3:19) என்று கூறினார். இப்பொழுது நம்மிடம் சொல்லப்பட்டது என்ன? இந்த மக்களிடம் சொல்லப்பட்ட இக்கட்டளை நமக்கும் உண்டு. இது தேவனிடம் இருந்து வந்தது. மேலும் இரட்சிப்பிற்கு அவசியமானது.

அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள இரட்சிக்கப்பட்ட நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும், நேரடியாகவோ மறைமுகமாகவோ ஜனங்கள் திருமுழுக்குப் பெறுமுன் தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பியுள்ளனர். ஒருவர் உண்மையிலேயே மனந்திரும்பாமலும் மூழ்கி திருமுழுக்குப் பெற முடியும்; ஆனால் அவர் தன்னையே முட்டாளாக்குகிறார். அவனுடைய இருதயத்தை தேவன் அறிவார்; மேலும் அவன் மனந்திரும்பவில்லையெனில், அவனுக்கு பாவ மன்னிப்போ, இரட்சிப்போ கிடையாது.

ஒருவர் தன் பாவங்களைவிட்டு நல்ல வாழ்வு வாழும்படியாக, அவைகளுக்காக வருத்தப்பட வேண்டும் (2 கொரி. 7:10). ஆனால் ஒருவர் தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்துவது மட்டும் போதாது. உண்மையில் அவர் அவைகளை விட்டுவிட வேண்டும். பின்பு அவர் தன்னுடைய வாழ்வை நற்செயல்களால் (நீதியான நடக்கையினால்) நிரப்ப வேண்டும், இல்லையெனில், பழைய பாவங்கள் திரும்பிவிடும் (கலா. 5:19–24; எபே. 4:24–29).

மனந்திரும்பினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டுவிட முடியாது. ஒருவர் பாவங்களைவிட்டு நல்ல வாழ்வு வாழலாம்; ஆனால் அவர் தேவனுடைய கற்பனைகளை கடைபிடிக்காத (கீழ்படியாத) வரை பாவியாகவே உள்ளார். ஒருவர் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, சுவிஷேசத்திற்கு கீழ்படியும் பங்கை நிறைவுசெய்து, சிறிது காலம் கிறிஸ்தவராய் வாழ்ந்து, பின்னர் பாவத்தில் விழவும் வாய்ப்புண்டு. அப்படிப்பட்டவர்க்கு என்ன நடக்கும்? அவர் மீண்டும் மனந்திரும்பி, தேவனிடம் ஜெபிப்பதின் மூலம் அவரிடம் திரும்பாவிட்டால், முதல் முறை மனந்திரும்பாததினால் அவர் நித்தியத்தை இழந்துவிடுவார் (2 பேதுரு 2:20–22). ஆண்டவர் என்ன சொன்னார் என்பதை சரியாக செய்யாவிட்டால் நீங்கள் உங்கள் ஆத்துமாவுடன் விளையாடக் கூடும். பாவம் உங்களை தண்டனைக்குட்படுத்தும்; ஆனால் நீதி உங்களை இரட்சிக்கும் (ரோ.6:23). நினைவில் கொள்ளுங்கள், ஒரு மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலா. 6:7–8)

# அறிக்கை (Confession)

அறிக்கை என்றால் ஏற்றுக்கொள்ளுதல், தெரிவித்தல், அறிவித்தல், அல்லது ஒன்றன் மீதுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்துதல் ஆகும். இவ்விஷயத்தில், ஒருவர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும். வேத வசனத்தின்படி, இப்படிப்பட்ட அறிக்கையானது ஒருவருடைய சொந்த வாயினால் எல்லார் முன் செய்யப்படும் அறிக்கையாக இருக்க வேண்டும்.

"*மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.*" (மத்.10:32,33) என்று கிறிஸ்து தாமே கூறினார். இப்பொழுது நாம் சில காரியங்களை உற்று நோக்குவோம். முதலாவது, கிறிஸ்து **எவனோ** என்கிறார். அது யாராக இருப்பினும் பரவாயில்லை, அந்த நபர் கிறிஸ்துவை மனிதர் முன் அறிக்கை செய்தால், அந்த நபரை கிறிஸ்துவும் பரலோகத்தில் உள்ள பிதாவின் முன் அறிக்கை செய்வார். "நீ என்னை அறிக்கை செய்; நானும் உன்னை அறிக்கை செய்வேன்" என்று கிறிஸ்து எளிமையாக கூறுகிறார். இது எவ்வளவு அருமையானது பார்த்தீர்களா? மற்றொரு முனையில், தன்னை மனிதன் முன் மறுதலிக்கிறவன் எவனோ அவனை தானும் பரலோகத்தில் உள்ள பிதாவின் முன் மறுதலிப்பதாக, அதே தாக்கத்துடன் கூறுகிறார். அதாவது, இயேசுவையும் அவருடைய சித்தத்தையும் (கட்டளை) பூமியில் யாரெல்லால் புறக்கணிப்பார்களோ, அவர்கள் நியாயத்தீர்ப்பில் புறக்கணிக்கப்படுவார்கள் என்றார்.

"*நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.*" (ரோமர் 10:10) என்று பவுல் கூறுகிறார். இந்த வாக்கியத்தில் நாம் இரண்டு காரியங்களை கவனிக்க வேண்டும். ஆரம்பிக்கையில், அறிக்கை என்பது **வாயினால்** செய்யப்பட வேண்டியது என்று பவுல் கூறுகிறார். இதை உறுதிப்படுத்த வசனத்தில் இருந்து உள்ள உதாரணத்தை நாம் சிறிது நேரம் கழித்துப் பயன்படுத்த உள்ளோம். இரண்டாவதாக, எழுத்தாளர் கூறுகையில் நம்பிக்கை மற்றும் அறிக்கை ஆகிய இரண்டுமே இரட்சிப்பிற்காக செய்யப்படுவது அல்லது அதை பெறும்படி

செய்யப்படுவது என்கிறார். இல்லை, ஒருவர் ஆண்டவரை நம்புவதால் (விசுவாசித்தல்) மட்டும் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட முடியாது; அதேப்போல் தான், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்வதினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டதாக அர்த்தம் இல்லை. ஆனால், அடுத்த செயலான ஞானஸ்நானம் என்னும் கிரியை தான் ஒருவரை கிறிஸ்துவுக்குள் உட்படுத்துகின்றது. ரோமர் 6:3,4 மற்றும் கலாத்தியர் 3:26,27–ஐ வாசியுங்கள்.

இப்பொழுது நாம், ஒருவருடைய விசுவாசித்தினை இன்னொருவர் முன்னிலையில் வாயினால் அறிக்கை செய்த வேத வசனத்தின் மாதிரியை அப்.8–ம் அதிகாரத்தில் பார்ப்போம். சத்தியத்தை போய் மந்திரிக்கு போதிக்கும்படியாக பிலிப்புவுக்கு அறிவுறுத்தப்பட்டது; மேலும் வசனப் பதிவு சொல்லுகையில், "*பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி; நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்துபோனான், அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து; ஊருக்குத் திரும்பிப்போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன்: ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்பு ஏறி, தன்னோடே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான். அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால்: அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்; மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சந்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று; அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி: தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக்குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப்*

*பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்."* (அப்.8:26–39).

இப்பகுதியை நாம் வாசித்துப் பார்த்ததில், என்ன நடந்தது என்பதை புரிந்துகொள்வது கடினம் இல்லை. கர்த்தருடைய தூதன் பிலிப்புவை ஒரு இடத்திற்கு போகச் சொன்னார்; மேலும் அங்கே ஒரு மனிதனை காண்பாய், என்றார். இங்கே தேவனுடைய தூதன் செய்தியை சொல்லும்படி தானே போகாமல், ஒரு சுவிஷேச பிரசங்கியாரை அனுப்பினார். அங்கே பிலிப்பு, ஒரு மத நம்பிக்கையுடைய, எத்தியோப்பிய மந்திரியை, எருசலேமில் தொழுகையை முடித்துவிட்டு தன் வீடு திரும்பிக் கொண்டிருந்த மனிதனை பார்த்தார். அந்த எத்தியோப்பிய மந்திரி யூத மதப் பற்றுடையவர் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், தான் கிறிஸ்துவைப் பற்றிதான் வாசிக்கிறார் என்று தெரியாமலேயே ஒரு வசனப்பகுதியை அவர் திருமறையில் வாசித்துக் கொண்டிருந்தார். பிலிப்பு அவருடன் சென்று சேர்ந்து, சத்தியத்தைப் போதித்து, பின் அவர் சுவிசேஷசத்திற்கு கீழ்படிய உதவினார். ஆனால் அவர் சத்தியத்திற்கு கீழ்படியும்படியாக, அவர் விசுவாசிக்கிறவராகவும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்பவராகவும், அதன்பின்பு அவர் பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற வேண்டும். இவை அனைத்திற்கும் பின்பு தான் அவர் தன் வழியே கிறிஸ்தவராக சந்தோஷத்துடன் சென்றார். இரட்சிப்பை நோக்கிய பயணத்தில் கிறிஸ்துவை அறிக்கை செய்தல் என்பது மற்றும் ஒரு படியாகும்.

# திருமுழுக்கு (ஞானஸ்நானம்) (Baptism)

இப்பொழுது நாம், ஒருவருடைய பாவங்களை மன்னித்து அவரை சபைக்குள் சேர்க்கக் கூடிய செயலாகிய திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பற்றி பார்ப்போம். இது மற்ற கட்டளைகளைப் போல அல்லாமல், வேதாகமத்தில் காணப்படும் வேறு எந்த கட்டளைகளையும்விட மிக முக்கியமானதாகும். ஒருவர் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க எடுக்கும் கடைசிப் படி இதுவாகும்; மேலும் தேவன் இதை கட்டளையிட்டிருப்பதினால் நாம் கீழ்படிய வேண்டும்.

திருமுழுக்கு மட்டுமே, விசுவாசம் இல்லாமல் இரட்சிக்க முடியாது; ஆனால் இரண்டில் ஒன்று இல்லாமல் ஒருவர் இரட்சிக்கப்பட முடியாது. ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக விசுவாசித்து, கிறிஸ்துவுக்குள்ளாக மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள்ளாக அறிக்கையிட்டு, பின்பு அவருக்குள் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெறுகின்றார். மற்றொரு வார்த்தையில், ஒவ்வொரு செயலும் ஒருவரை கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்துவிடம் நெருங்கி வரச் செய்கின்றது; ஆனால் ஆண்டவர் செய்யச் சொன்ன இவை எல்லாவற்றையும் ஒருவர் செய்யாவிடில் அவருக்கு இரட்சிப்பு இல்லை. இதை விளக்க வேண்டுமெனில், ஒருவர் தன்னுடைய வீட்டுக் கதவிலிருந்து சில அடிகள் (Feet) தள்ளி நிற்கலாம். அவர் ஒரு அடி எடுத்து வைத்தவுடன் தன் வீட்டுக் கதவை அடைவதில்லை; மாறாக, மற்றொரு அடி, மற்றொரு அடி என கடைசி அடி எடுத்து வைத்த பிறகே வீட்டிற்குள் பிரவேசிக்க முடியும். அதனால் அவர், தான் எடுத்து வைத்த கடைசி அடி (Feet) தான் தன்னை வீட்டிற்குள் செல்ல உதவியது என கூற முடியாது; ஏனெனில், அதற்கு முந்தைய அடிகளும் அவர் கதவண்டையில் வர உதவியது. இந்தக் கருத்தை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள் என நான் நம்புகிறேன். "*கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும், அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?*" (ரோ. 6:3) என்று பவுல் கூறுகிறார். மேலும் அவர் கூறுகையில், "*ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ,*

*அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.*" (கலா. 3:27) என்றார். இப்பொழுது, ஒருவர் கிறிஸ்துவுக்குள் எப்படி நுழைகிறார்? அது, விசுவாசத்தினால் மட்டுமா? அது மனந்திரும்புதலினால் மட்டுமா? திருமறையின்படி, அது திருமுழுக்கு என்னும் செயலினால். திருமறை (வேதாகமம்) சொல்லும் இந்த முறையின்படி நீங்கள் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெறவில்லை என்றால், நீங்கள் கிறிஸ்துவுக்குள் இல்லை. நீங்கள், "கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டாலும் அப்படி இல்லை. மேலும், நீங்கள் "நான் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) எடுக்காமலே இரட்சிக்கப்பட்டேன்" என்று சொல்லுவது, கிறிஸ்துவுக்கு வெளியே, கிறிஸ்து இல்லாமல் இரட்சிக்கப்பட்டதாகும். ஆனால், யார் இதை நம்புவார்கள்?

ஒருவரை கிறிஸ்துவுக்குள் நடத்துகின்றே செயலே, அதே நேரத்தில் அவரை கிறிஸ்துவின் சரீரம் அல்லது அவருடைய (கிறிஸ்துவின்) சபையில் சேர்க்கின்றது. "***நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.***" (1கொரி. 12:13). இவ்வண்ணமாகவே ஆண்டவர் தன்னுடைய சபையில் சேர்க்கிறார் (அப். 2:47).

திருமுழுக்கு (ஞானஸ்நானம்) என்றால் என்ன? சிலர் அதை தெளித்தல் (அல்லது) ஊற்றுதல் (அல்லது) மூழ்குதல் என்பர்; மேலும் இதில் ஒருவருக்கு எது விருப்பமோ அதை செய்யலாம் என்றும் கூறுவர். ஆனால் ஒருவர் ஆராய்ந்து பார்த்தால், "தெளித்தல்" வெறும் தெளிப்பதுதான் என்றும், "ஊற்றுதல்" வெறும் ஊற்றுவதுதான் என்றும் புரியும். இரண்டில் எதுவுமே, திருமுழுக்கு என கூறமுடியாது. திருமுழுக்கு (Baptism) என்ற வார்த்தை, மூல கிரேக்க வார்த்தையில் "Baptizo" என்பதில் இருந்து வருகிறது; அதற்கு "மூழ்குதல்" (அல்லது) "புதைத்தல்" அல்லது "முக்குதல்" என்று அர்த்தம். இந்த இடத்தில் அது, "தண்ணீரில் புதைத்தல்" அல்லது "தண்ணீரில் மூழ்குதல்" ஆகும் (ரோ. 6:3,4; கொலே. 2:12; அப். 8). இப்பாடத்தில் இருந்து தெளித்தல், ஊற்றுதல் என்பதை வெளியேற்ற, பாருங்கள், வேதாகமமே

திருமுழுக்கை (ஞானஸ்நானம்) மூழ்குதல் என்கிறது (கொலே. 2:12). மேலும் பவுல், ஒரே ஒரு திருமுழுக்கு தான் உண்டு என்கிறார் (எபே. 4:5). அப்படியானால், அது எது? ஒரே ஒரு திருமுழுக்கு (ஞானஸ்நானம்) தான் உண்டு, அதுவும் மூழ்குதல் (அடக்கம்) ஆகும்.

நாம் ஏற்றுக்கொண்டாலும் இல்லையென்றாலும், அதுதான் எப்பொழுதுமே திருமறையின்படி இருந்தது, இருக்கப்போவது. நீங்கள் தெளிக்கப்பட்டோ, ஊற்றப்பட்டோ திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற்றிருந்தால், நீங்கள் திருமுழுக்கே (வேதாகமத்தின்படி) பெறவில்லை. நீங்கள் பெற்றது திருமுழுக்கு தான் என நீங்கள் நினைக்கலாம், மற்றவர்கள் கூறலாம். ஆனால், திருமறையின்படி (வேதாகமம்) நீங்கள் பெற்றது திருமுழுக்கு இல்லை. இப்பொழுது, யாருடைய வார்த்தையை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்? மனிதன் கூறுவதையா, திருமறை (வேதாகமம்) போதிப்பதையா?

வசனத்தின்படி, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமெனில் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற வேண்டும். "***விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.***" (மாற்கு 16:16) என்று கிறிஸ்து கூறினார். "***அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது.***" (1 பேதுரு 3:21) என்று பேதுரு கூறினார். பாருங்கள் கிறிஸ்துவும், பேதுருவும், இரண்டுபேருமே திருமுழுக்கு (ஞானஸ்நானம்) நம்மை இரட்சிக்கின்றது என்கின்றனர். அப்படி இருக்கும்பொழுது, திருமுழுக்கு (ஞானஸ்நானம்) இரட்சிக்காது என்று நீங்கள் கூறுவீர்களா? திருமுழுக்கு எப்படி, ஏன் நம்மை இரட்சிக்கிறது? ஏனென்றால், ஆண்டவர் அப்படி கூறினார்; மேலும், அதுவே அதற்கு போதுமான காரணமாகும். ஆனாலும், அவரோ (அல்லது) திருமறையோ (பைபிள்) "திருமுழுக்கு மட்டுமே" இரட்சிக்கும் என கூறவில்லை.

திருமுழுக்கு (ஞானஸ்நானம்) கட்டளையிடப்பட்டது என்பதற்கு

உதாரணம் எங்கு உள்ளது? பெந்தேகொஸ்தே நாளில், பேதுரு ஜனங்களிடம், தங்கள் பாவ மன்னிப்பிற்கு என்று மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறும்படி கூறினார் (அப். 2:38). அவர் கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரிடமும் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) எடுக்கும்படி கூறினார் (அப். 10:48). சவுல், எழுந்து பாவங்கள் போகும்படி கழுவப்படும்படி கூறப்பட்டார் (அப். 22:16). ஆகையால், மிக நிச்சயமாக, ஜனங்கள் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெறும்படி கட்டளையிடப்பட்டனர் என்றும், ஏன் அவர்கள் திருமுழுக்கு பெற வேண்டும் என்றும் கூறப்பட்டனர் என்றும், திருமறையில் இருந்து காண்கிறோம். உண்மையில், புதிய ஏற்பாட்டு சட்டத்தின்படி, ஒவ்வொரு மனமாற்ற நிகழ்ச்சியிலும், ஜனங்கள் திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெறும்படி, கூறப்பட்டனர். வாசியுங்கள் : அப். 2,3,8,9,10 மற்றும் 16–ம் அதிகாரங்கள்.

திருமுழுக்கு, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலை நமக்கு அடையாளப்படுத்துகிறது. ஒருவர் தன் பாவங்களுக்காக மரித்து, திருமுழுக்கிலே (தண்ணீரில்) ஆண்டவருக்குள் அடக்கம் பண்ணப்படுகிறார்; மேலும், பின்பு தண்ணீர் கல்லறையில் இருந்து புதுவாழ்வு வாழும்படி உயிர்தெழுகிறார். ரோமர் 6–ம் அதிகாரத்தை கவனமாக வாசியுங்கள்.

திருமுழுக்கு (ஞானஸ்நானம்) என்னும் செயலினால் புதிய பிறப்பு உண்டு. ஒருவன் மீண்டும் பிறக்க வேண்டும். அதாவது, தண்ணீர் மற்றும் ஆவியினால் பிறக்க வேண்டும் என ஆண்டவர் கூறினார். "தண்ணீரினால்" என்பது திருமுழுக்கு (ஞானஸ்நானம்) என்பதையும், "ஆவியினால்" என்பது தேவ கட்டளைப்படி என்பதையும் குறிக்கின்றது (யோ.3).

ஆண்டவர் கட்டளையிட்டவைகளை செய்வது, நிச்சயமாக யாருக்கும் மிகவும் சிரமம் இல்லை. அப்.8–ம் அதிகாரத்தில் பார்க்கும் மந்திரியைப் போல, அவருடைய முன்மாதிரியின்படி திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெறுங்கள்; பின்பு உங்கள் வழியில் சந்தோஷத்துடன் போகலாம். அது இன்றி சிரமம்.

# ஆராதனை நாள் (The Day of worship)

ஆராதனைக்குரிய நாள் எது? அது வெள்ளிக்கிழமையா, சனிக்கிழமையா? அல்லது ஞாயிற்றுக்கிழமையா? முகமதியர்களாய் இருக்கக் கூடிய சிலர், அதை வெள்ளிக்கிழமை என்பர். பழைய (ஏற்பாட்டு) சட்டத்தை இன்னும் கடைபிடிக்க நினைக்கும் சிலர், அதை சனிக்கிழமை என்பர். தங்களை கிறிஸ்தவத்தைப் பற்றிய அறிவு நிறைந்தவர் என்று நினைக்கும் இன்னும் பலரும், அந்த நாள் ஞாயிற்றுக்கிழமை என்பர். ஆனால் திருமறை என்ன போதிக்கின்றது?

திருமறை, இஸ்லாம் வழியை போதிப்பது இல்லை என்பதாகையால், வெள்ளிக்கிழமை ஆராதனையின் நாள் என்பதை யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. சனிக்கிழமை என்று பார்கையில், பழைய சட்டமானது ஒய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என கூறியது உண்மை. ஆனால் உண்மை என்னவெனில், நாம் இனியும் பழைய (ஏற்பாடு) சட்டத்தின் கீழ் இல்லையாகையால், நாம் ஒய்வுநாளை அனுசரிக்க வேண்டியதில்லை. (அல்லது) தேவனை சனிக்கிழமை ஆராதிக்க வேண்டியதில்லை. புதிய (ஏற்பாடு) சட்டம் கொடுக்கப்பட்ட போது, ஆராதனைக்கான புதிய நாளும் கொடுக்கப்பட்டது: ஆண்டவர் கடைசி இடத்தில் அல்ல, முதல் இடத்தில் இருக்க வேண்டியவர். அதனால், அவர் நம்மை வாரத்தின் ஏழாம் நாளில் ஆராதிக்க கூறாமல்; மாறாக, வாரத்தின் முதல் நாளில் ஆராதிக்கும்படி கூறினார். அப். 20:7–ல் சொல்லப்பட்டபடி பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் இதை செய்தனர். "***வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்.***"

இப்பொழுது கவனியுங்கள், இங்கே வாரத்தின் ஏழாம் நாள் என்று கூறாமல், குறிப்பாக வாரத்தின் முதல் நாள் என்று சொல்லப்பட்டுள்ளது. வாரத்தின் முதல் நாளாகிய, கிறிஸ்து கல்லறையில் இருந்து எழுந்த அதே நாளிலேயே கிறிஸ்தவர்கள் ஒன்று கூடி, அவரை நினைவுகூரும்படியாக அப்பத்திலும், திராட்ச ரசத்திலும் பங்குபெறும்படி கட்டளையிடப்பட்டனர்.

மீண்டுமாக, நம்முடைய உலகப் பொருட்களை தேவனுக்கென்று கொடுப்பதும் வாரத்தின் முதல் நாளில் தான் செய்யனும். "***நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன்***

*வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.*" (1கொரி. 16:2) என்று வாசிக்கிறோம்.

ஆனால், கொடுத்தல் என்பது ஏன் வாரத்தின் முதல் நாளில் செய்யப்பட வேண்டும்? ஏனெனில் அது தான் கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதனை செய்யக் கூடும் நாளாகையால், கொடுத்தலுக்கு ஏற்ற சமயமாக உள்ளது. அது அவ்வளவு எளிமையான ஒன்று. ஒருவேளை கிறிஸ்தவர்கள் ஆராதனை செய்யும்படியாக வேறொரு நாள் கொடுக்கப்பட்டிருக்குமானால், நிச்சயமாக பவுல், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கொடுக்கும்படி கூறியிருக்கமாட்டார்.

எபிரெய நிருபத்தில் நாம் இப்படியாக அறிவுறுத்தப்படுகின்றோம், "*சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.*" (எபி. 10:25). பின்வருபவைகளை தயவுசெய்து கவனியுங்கள்.

1. அவர்கள் ஆராதனையை தவறவிடக் கூடாது.
2. சிலர் ஆராதனையை தவறவிட்டதைப் போல
3. மாறாக, அவர்கள் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும்.
4. நாளானது நெருங்கி வருவதை அவர்கள் எவ்வளவாய் பார்க்கிறார்களோ.

தெளிவாக, அவர்கள் கூடுவதற்கு என்று ஒரு குறிப்பிட்ட நாள் குறிக்கப்பட்டுள்ளது என்பது அவர்களுக்குத் தெரியும்; மேலும் ஓய்வு நாள் சட்டமானது சிலுவையில் ஆணியடிக்கப்பட்டு, அந்த இடத்தை ஆராதனைக் கென்ற புதிய நாள் எடுத்துக் கொண்டமையால், அது வாரத்தின் முதலாம் நாள் தான் என்பது தெளிவாக உள்ளது. ஒருவர் எடுக்கக் கூடிய சாத்தியமான முடிவு இது மட்டுமே.

ஒருமுறை யோவான் கூறுகையில், "*கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்.*" (வெளி. 1:10). சிலர் ஒருவேளை, அப்படியானால் எல்லா நாளுமே ஆண்டவருடைய நாள் தான் என கூறலாம். ஆம், எல்லா நேரமும் தேவனுடையது என்பது உண்மைதான்; ஆனால், யோவான் தன்னுடைய மனதில் நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட நாளை மனதில் வைத்திருந்தார், இல்லையெனில் அவர் நாளைப்பற்றியே குறிப்பிட்டிருக்க

மாட்டார். நிச்சயமாக, எல்லா நாளுமே ஆண்டவருடைய நாள் தான் என்ற அர்த்தப்படுமானால், "கர்த்தருடைய நாளிலே நான் ஆவிக்குள்ளானேன்" என்று அவர் குறிப்பிட்டு கூறியிருக்க மாட்டார். ஆனால், அவர் இப்படி குறிப்பிட்டுக் கூறியுள்ள பட்சத்தில், அவர் வாரத்தின் முதல் நாளாகிய ஆராதனையின் நாளையே குறிப்பிட்டிருக்க வேண்டும்.

ஆண்டவருடைய உயிர்தெழுதலைப் பற்றிப் பார்க்கையில், அவர் கல்லறையில் இருந்து வாரத்தின் முதல் நாளில் தான் எழுந்தார் என்பதற்கு தேவையான ஆதாரத்தைப் பார்க்கிறோம். (மத். 28:1; மாற்கு 16:1,2). சிலர் விவாதிப்பது என்னவென்றால், ஓய்வு நாள் பரிசுத்தமாக ஒரு வேலையும் செய்யாமல் அனுசரிக்கப்பட வேண்டியதால்தான், ஆண்டவர் சனிக்கிழமை உயிர்தெழவில்லை என்பர். ஆனால் இது எவ்வளவு முட்டாள்தனமானது. ஏன் ஆண்டவர் ஓய்வு நாளில் குணமாக்கவில்லையா? மாறாக, அவர் சனிக்கிழமை உயிர்தெழாமல் வாரத்தின் முதல் நாளில் உயிர்தெழுந்ததின் மூலம் ஆராதனையில் நாளை அடையாளப்படுத்தியுள்ளார்.

பழைய முறைமையின்படியான ஆராதனையை எடுத்துப் போட்டதின் மூலம், அதன் பின் கிறிஸ்துவால் ஒரு புதிய ஆராதனை முறையும், புதிய ஆராதனை நாளும் கொடுக்கப்பட்டது. அந்தப் பழைய ஆராதனையானது, புதிய முறையின்படியிலான ஆராதனையால் மாற்றப்பட்டது. பழைய ஆராதனைக்குரிய நாள் கடந்து போய், புதிய நாள் கொடுக்கப்பட்டது. அந்த பழைய மாம்சத்திற்குரிய ராஜ்யத்திற்கு பதிலாக, புதிய ஆவிக்குரிய ராஜ்யம் கொடுக்கப்பட்டது. மிருக இரத்தத்திற்கு பதிலாக கிறிஸ்தவின் இரத்தம் கொடுக்கப்பட்டது. பழைய பெயரானது இனி ஒருபோதும் இராமல், புதிய நாமம் கொடுக்கப்பட்டது. தேவனுடைய மாற்றம் பார்த்தீர்களா?

நீங்கள் வேத வசனத்தின்படி தேவனை ஆராதிக்க விரும்புவீர்களானால், முதலாவது நீங்கள் அவர் நிர்ணயித்த நாளாகிய வாரத்தின் முதல் நாளில் தான் ஆராதிக்க வேண்டும். நிச்சயமாக வாரத்தின் முதல் நாளில் ஆராதிப்பதற்கும், மற்ற நாளில் ஆராதிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. இல்லையெனில் ஆண்டவர் அதைப் பற்றி அப்பொழுதே எழுதியிருக்கமாட்டார். இப்படி வாரத்தின் முதல் நாளில் கூடி ஆராதிக்க வேண்டுமென 1 கொரி. 16:2–ல் கட்டளையிடப்பட்டுள்ளது. மேலும் கிறிஸ்தவர்கள் (வேதாகமத்தில்) அந்த நாளில் ஆராதித்ததாக உதாரணங்களும் உண்டு. ஆகையால் இந்த கட்டளை இன்று எல்லா கிறிஸ்தவர்களையும் கட்டுப்படுத்தும்.

# ஏற்றுக்கொள்ளப்படும் ஆராதனை (Acceptable worship)

ஆராதிப்பதற்கு சரியான வழி ஒன்று உண்டு; மேலும் தவறான வழியும் உண்டு. மனிதனுடைய வழியும் உண்டு, திருமறையின் வழியும் உண்டு. நீங்கள் நேர்மையாகவும், மனதாரவும் ஆராதனை செய்தால், உங்கள் ஆராதனை எப்படி இருந்தாலும், அதனால் ஒரு வித்தியாசமும் இல்லை என்ற ஒரு கொள்கை இவ்வுலகில் உண்டு. ஆனாலும், ஆராதிப்பதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு என்றும், அதைத் தான் ஆண்டவர் அங்கீகரித்துள்ளார் என்றும் பைபிள் போதிக்கின்றது.

"***தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.***" (யோ. 4:24) என்று கிறிஸ்து கூறினார். இவ்வகையில் தான் ஆராதனை செய்யப்பட வேண்டும் என ஆண்டவர் கூறினார். நமக்கு பிரியமாக இருக்குமானால், இவ்வசனத்தில் சொன்னபடி ஆராதிக்கலாம் என்று அவர் கூறவில்லை; மாறாக, இந்த வழியில் மட்டுமே நாம் ஆராதனை செய்ய வேண்டும் என்று கூறினார். அது எப்படி? ஏற்றுக்கொள்ளப்படும் ஆராதனையானது, தேவனை நோக்கியதாகவும், ஆவியோடும் உண்மையோடும் செய்யப்படுவதாகவும் இருக்க வேண்டும். அதாவது, ஒருவர் தேவனை புரிந்துகொள்ளுதலோடு ஆராதிக்க வேண்டும். அவர் அதைப் பற்றி நேர்மையாக இருக்க வேண்டும். அடுத்ததாக, அவர் தேவனை சத்தியத்தின்படி ஆராதிக்க வேண்டும், அதாவது திருமறையின் (பைபிள்) போதனையின்படி ஆராதிக்க வேண்டும். இதுதான் ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பதாகும். ஒருவர் புரிந்துகொள்ளுதலோடு, வசனத்தின்படியில்லாமல் ஆராதிக்க முடியும். அதேப்போல, திருமறை போதிக்கிறபடி ஆராதிக்கும்போதே நேர்மையற்றதாகவும் செய்ய முடியும். இந்த இரண்டு முறையிலும் ஆராதனையானது ஏற்கப்படாது. தேவனை பிரியப்படுத்துகிறபடி ஆராதிக்க விரும்புகிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பது அவசியம்.

ஆனால், ஆராதனை என்னும் செயலைப் பற்றி புதிய ஏற்பாடு என்ன போதிக்கின்றது? வசனங்களை நீங்கள் படித்துக்கொண்டே வரும்போது தன்னை பிரியப்படுத்துகிற வகையில் ஆராதனை இருக்க வேண்டுமானால்,

தேவன் கிறிஸ்தவர்களிடம் செய்யச் சொல்லும் ஐந்து வித்தியாசப்பட்ட காரியங்களைப் பார்க்கலாம். இவைகளை நாம் ஒன்றன்பின் ஒன்றாக படிக்கலாம்.

முதலாவதாக, ஒரு கிறிஸ்தவன் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் ஆண்டவருடைய ஜனங்களோடே வசனத்தைக் கற்றுக்கொள்ளும்படி கூடி வர வேண்டும். "*நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு*" (2தீமோ. 2:15) என்று பவுல் கூறுகிறார்.

இரண்டாவது, ஆண்டவருடைய நாளில் (ஞாயிறு) கிறிஸ்தவர்கள் தேவனிடம் ஜெபம் செய்யும்படி கூடி வர வேண்டும். இதை வலியுறுத்தக் கூடிய அநேக வசனங்கள் உண்டு. உதாரணமாக, அப். 2:42–ல், ஆதி கிறிஸ்தவர்கள் ஜெபத்தை உள்ளடக்கிய அப்போஸ்தலர்களின் உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தனர் எனக் கூறுகின்றது. 1தெச. 5:17–ல், நாம் இடைவிடாமல் ஜெபம் செய்ய வேண்டும் என பவுல் கூறுகிறார். லூக். 18:1–ல் ஆண்டவர் சொல்லும்போது, நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும் என்றார்.

மூன்றாவது, தேவனுடைய துதியை பாடல்களால் பாடுவதற்கு என்ற நோக்கத்துடன் கிறிஸ்தவர்கள் ஒன்று கூட வேண்டும். "*சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி...*" (எபே. 5:19) என்று நாம் வாசிக்கின்றோம். அதே எழுத்தாளர் மீண்டும் கூறுகையில், "*கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி...*" (கொலே. 3:16) என்றார்.

நான்காவதாக, ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும். அங்கே, அப்பமானது கிறிஸ்துவின் சரீரத்தின் நினைவாகவும், திராட்சரசமானது கிறிஸ்துவின் இரத்தத்தின் நினைவாகவும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஆண்டவர் இப்பந்தியை அனுசரிக்கச் சொன்னது எப்படி என தெய்வீக பதிவிலிருந்து (பைபிள்) பார்ப்போம். "*அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு,*

*பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*" (மத். 26:26–28).

1கொரி. 11–ம் அதிகாரத்தில் பவுல், ஆண்டவருடைய வாக்கியங்களை குறிப்பிடுகிறார்; மேலும் அப். 20:7–ல் இந்த கர்த்தரின் பந்தியானது வாரத்தின் முதல் நாளிலே அனுசரிக்கப்பட்டது என்பதற்கு நமக்கு உதாரணம் உள்ளது.

ஐந்தாவது மற்றும் கடைசியாக, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளிலே காணிக்கைக் கொடுக்க வேண்டும் என்ற கட்டளை நமக்கு உண்டு. பவுல் கூறுகையில், "*நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக் கடவன்.*" (1கொரி. 16:2) என்கிறார். மீண்டும் அவர் கூறுகையில், "*அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.*" (2 கொரி. 9:7) என்றார்.

இந்த வகையில் தான் தேவனை ஆராதிக்க வேண்டும். இதற்கு மிஞ்சி அதிகமாய் நாமாக செய்வது அதிகப்படியானது. இதிலிருந்து குறைத்துச் செய்வது மிகவும் குறைவானது. தேவன் பேசியுள்ளதை, மனிதன் அப்படியே செய்ய வேண்டும்.

தேவனுடைய வழி எளிமையும், குறிப்புமானது. அது பணக்காரரோ, ஏழையோ, படித்தவரோ, படியாதவரோ அல்லது எப்படிப்பட்டவருக்கும் ஆராதிக்கின்ற தருணத்தைத் தருகின்றது. ஆனாலும், சிலர் இதை (ஆராதனையை) குழப்பமாக்கி அதில் சடங்காச்சாரங்களை புகுத்த நினைக்கின்றனர். தாழப் பணிவதும், குதிப்பதும், மெழுகுவர்த்தி ஏற்றுவதும், நடந்துகொண்டும் இன்னும் பல பலவற்றை புகுத்துகின்றனர். குறித்துக் கொள்ளுங்கள், இவைகளெல்லாம் தேவனால் அல்ல, மனிதனால் உண்டானவை.

பாருங்கள்! மனிதர் அனைவரும் ஒரே தேவனை ஆராதிப்பார்களானால், அவர்கள் அனைவரும் ஒரே வழியில் (மாதிரி) தான் ஆராதிக்க வேண்டும். அதாவது திருமறை (பைபிள்) முறைப்படி இதை புரிந்து கொள்ளுங்கள்.

# வேத ஆராய்ச்சி (Bible Study)

வேதத்தைப் படிப்பதைப் பற்றியதான ஒரு பாடத்திற்கு அவசியமில்லை என்பதைப் போல் தோன்றினாலும், அப்படிப்பட்ட ஒன்று அத்தியாவசியமானது. ஏன்? அநேக காரியங்களின் மீது நம்முடைய கவனத்தைச் செலுத்தும்படி அது தேவையானது.

ஆரம்பமாக, அது ஒருவேளை ஞாயிறு ஆராதனையானாலும், வீட்டில் நடக்கும் வேத ஆராய்ச்சியானாலும் அது அவ்வாறே வேதத்தைப் படிப்பதாக இருக்க வேண்டும். ஏனென்றால், வேதத்தைப் படிக்காமல் அதை வேத ஆராய்ச்சி என்று எப்படிக் கூற முடியும்? இதன் நோக்கம் என்னவெனில், வேத ஆராய்ச்சி நேரங்களில், மனிதனுடைய கொள்ளைகளுக்கோ, சட்டங்களுக்கோ இடமில்லை என்பதை வலியுறுத்தவே. மனிதன் தெரிந்து கொள்ள வேண்டிய புஸ்தகம் வேதாகமம்; மேலும் ஆண்டவரின் சித்தத்திற்கு முரணாக உள்ளதை புலப்படுத்தும்.

தேவனை ஆராதிக்கும் ஒவ்வொரு சமயமும், நாம் வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அது ஆராதனையில் ஒரு முக்கியமான பகுதியாகும். வசனத்தை ஒருவர் படிப்பதின் மூலம் ஆண்டவரின் அருகில் சேருகிறார். அவர் தேவனைப் பற்றிக் கற்றுக் கொள்கிறார். அப்படிப் படிக்கும் நபர், கிறிஸ்துவைப் பற்றிக் கற்றுக்கொண்டு, கிறிஸ்து உலகத்தின் பாவங்களுக்காக தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தார் என அறிந்துகொள்வார். மேலும் அவர், சபை எவ்வாறு ஆரம்பமானது என்றும், தன்னுடைய வாழ்வை ஆளவேண்டிய தேவனுடைய சட்டத்தைப் பற்றியும் அறிந்து கொள்கிறார். இப்படிப்பட்டப் படிப்பானது, அவரை கிறிஸ்தவ வாழ்வு வாழ ஆயத்தமாக்கி, மற்றவர்கட்கு தனிப்பட்ட முறையிலும், பொதுவிலும் போதிக்க அவரைத் தயாராக்கும்.

ஒருவர் வேதாகமத்தை, வீட்டில், அதாவது தினந்தோறும் படிக்க வேண்டும். அவர் வசனத்தை விருந்துபோல் உண்ணவேண்டும்; இல்லையேல்

அவர் ஆவிக்குரிய ரீதியில் மரிக்க நேரிடும். கர்த்தருடைய நாளில் (ஞாயிறு) பெறும் ஆவிக்குரிய உணவினால் மட்டும் ஒருவர் உயிர்வாழ முடியாது. கர்த்தருடைய நாளின் ஆகாரம் மிகவும் அவசியம்; எனினும் அவர் தினந்தோறும் அதை உட்கொள்ள வேண்டும். ஒருவர் எழுதப்பட்ட வேத வாக்கியங்களை படிக்கும் போதுதான், இவ்வகையில் ஆண்டவர் அவரிடம் பேசி அவர் விசுவாசமுள்ளவராயிருந்து பரலோகம் செல்ல என்ன செய்ய வேண்டும் என வெளிப்படுத்துகிறார். நிச்சயமாக, ஒவ்வொரு கிறிஸ்தவர்க்கும் இது முக்கியமானது.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில், ***"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."*** (2தீமோ. 2:15) என்று கூறுகிறார். இப்பகுதியில் பவுல் சொல்வதைக் கவனியுங்கள். முதலாவது : **படிக்க வேண்டும்,** அதாவது எழுதப்பட்டவைகளில் கவனம் செலுத்து, தியானம் செய். அடுத்தது, தனிநபரை அவர் என்ன சொல்லி ஊக்கப்படுத்துகிறார் என்றால், "**உன்னை** தேவனுக்கு முன் உத்தமனாய் நிறுத்தும்படி..." தன்னை ஆவிக்குரிய ரீதியில் புறக்கணித்துவிட்டு மற்றவர்களைப் பற்றி ஒருவர் அக்கறைப்பட முடியாது. மூன்றாவது, அவர் குறிப்பிடுவது, ஒருவர் தேவனால் ஏற்றுக் கொள்ளும்படி அல்லது **உத்தமனாக இருக்கும்படி** படிக்க வேண்டும்; ஏனெனில், ஒருவர் கற்றுக் கொள்ள மறுப்பாரேயானால், தேவனுக்கு முன் உத்தமனாக எப்படி இருக்க முடியும்? அப்படியே கூறிக்கொண்டு செல்கையில், ஒருவர் ஊழியக்காரனாய் இருக்கும்படி படிக்க வேண்டும் என்கிறார். வேதாகமம் என்ன போதிக்கின்றது என நாம் தெரிந்து கொண்டால், ஆண்டவருக்காக நாம் பெரிய காரியங்களைச் செய்ய முடியும். நாம் படிக்க வேண்டியவிதமாக வசனத்தைப் படித்தால், அது நம்மை வெட்கப்படாமல் காக்கும். பின்பு நாம் தேவனைப் பற்றியோ, கிறிஸ்துவைப் பற்றியோ, சுவிஷேசத்தைப் பற்றியோ, சபையைப் பற்றியோ அல்லது கிறிஸ்தவத்தைப் பற்றியோ வெட்கப்படப் போவதில்லை என்று காண்போம். மேலும் இறுதியாக அவர் கூறுகையில், சத்திய வசனத்தை நிதானமாய் பகுக்கும்படியாக நாம் வசனத்தைப் படிக்க வேண்டும்.

ஏன் அநேக மக்கள் மோசேயின் சட்டத்திற்குச் சென்று, இன்றைக்குள்ள மக்களை பத்துக் கட்டளையினால் கட்டுவிக்கின்றனர்? ஏனெனில், அவர்கள் வேதத்தைப் படித்துச் சரியாக சத்தியத்தை பகுத்துக் கற்கவில்லை. ஆகையால் வசனத்தைப் படிப்பதைப் பற்றி பவுல் நிறைய கூறுகிறார்; மேலும் நாம் அவருடைய அறிவுரைகளைக் கேட்க வேண்டும். அப்படிச்செய்தால், அநேக முக்கியமான காரியங்களைப் பற்றி நாம் அறியாமல் இருக்க மாட்டோம்.

நம்முடைய வீட்டிலானாலும், ஆராதனையிலானாலும் வேத ஆராய்ச்சியின் மூலம் அநேக காரியங்களை பிரயோஜனமாகப் பெற்றுக் கொள்ள, வேத ஆராய்ச்சிக்கான சில சட்டங்களைப் பார்ப்போம்.

1. **யார் பேசுவது?** வேதாகமத்தின் ஒவ்வொரு வசனத்தை வாசிக்கும்போதும் இக்கேள்வியைக் கேளுங்கள். அது மோசேயா, கிறிஸ்துவா, பவுலா அல்லது யார்? வசனம் சொல்லும் செய்தியைத் தெளிவாக நாம் புரிந்துகொள்ள இது உதவும்.

2. **அது எப்பொழுது பேசப்பட்டது?** அது மோசேயின் சட்டத்தின் கீழ் பேசப்பட்டதா, அல்லது கிறிஸ்துவின் சட்டத்தின் கீழா? இது மிகப்பெரிய வித்தியாசத்தை உண்டுபண்ணும்; மேலும் வசனங்களைச் சரியாகப் புரிந்து கொள்ள, அவை நேரம் மற்றும் சட்டங்களின் அடிப்படையில் சரியாக பகுத்தறியப்பட வேண்டும்.

3. **எழுத்தாளர் யாரிடம் பேசுகிறார்?** அவர் தன்னுடைய காலத்தில் உள்ள யாரிடமாவது பேசுகிறாரா, அல்லது அவர் நம்மிடம் பேசுகிறாரா?

4. **உங்களுடைய படிப்பை முறையாகச் செய்யுங்கள்.** வேதாகமத்தை ஏனோ தானோ என்று திறந்து எங்கிருந்தாவது படிக்காதீர்கள்; மாறாக ஒவ்வொரு புத்தகமாக அல்லது பாடமாகப் படியுங்கள்.

5. **அது உருவகமாகச் சொல்லப்பட்டதா, அல்லது உண்மையில் சொல்லப்பட்டதா?** நீங்கள், வேதாகமம் என்ன நடையில் பேசுகிறதோ அதைக் கவனிக்க வேண்டும்; மேலும், நேரடியாக வேதாகமம் கூறும் செய்தியை உருவகமாகவும், உருவகமாகக் கூறும் செய்தியைத்

தாராளமாகவும் எடுத்துக் கொள்ளக்கூடாது. சிலர் எல்லாவற்றையும் நேரடியாக தங்களுக்குக் கூறுவதாக எடுத்துக் கொள்வர். ஆகையால் நாம், அந்தப் பகுதியில் சொல்லப்பட்ட விதத்தை வைத்துச் சரியாக முடிவுசெய்தால் தான், அது என்ன நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்டதோ அதைப் புரிந்து கொள்ளமுடியும்.

6. கொஞ்சம் நல்ல **பகுத்தறிவை (பொது) உபயோகப்படுத்த வேண்டும்.** வேதாகமமானது கட்டளைகள், உதாரணங்கள் மற்றும் தேவையான உணர்ந்துகொள்ளுதலின் மூலம் போதிக்கின்றது. சொல்வதை முழுமையாக உணராமல், நீங்களாகவே ஏதேனும் முடிவுகளுக்கு முந்திஓடிப் பைபிள் சொல்லாததைப் புரிந்து கொண்டு, வசனத்திற்கு வசனம் முரணானதாக எண்ணாதீர். வேதவசனம் முரண்படாமல், ஒன்றிசையக் கூடியது.

7. **எப்பொழுதுமே முழு வசனப் பகுதியையும் படியுங்கள்;** ஒரு பகுதியில் உள்ள ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அதை மற்ற பகுதியில் இருந்து பிரித்து, நீங்கள் ஏற்கனவே மனதில் வைத்துள்ள கொள்கையை நியாயப்படுத்த அவ்வசனத்தைத் தனியாகப் பிரித்துப் பயன்படுத்தாதீர். ஒரு குறிப்பிட்ட பாடத்தைப்பற்றி பைபிள் சொல்வதை அறிய, முழுமையாகத் தெளிவாகப் படித்து, அதை முழுமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஆம், வேதாகமத்தைப் பற்றியும் அதை எவ்வாறு கற்பது பற்றியும் நாம் அறிந்து கொள்ள நிறைய காரியங்கள் உண்டு; நாம் எல்லாருமே, ஏற்கனவே எவ்வளவு தூரம் பைபிளைப் படித்திருந்தாலும், ஆராதனையிலும் நம் வீட்டிலும் மேலும் மேலும் வேதத்தைப் படிக்க வேண்டும். எவ்வளவுக்கு அதிகமாக பைபிளைப் படித்துப் புரிந்து கொள்கிறோமோ, அவ்வளவு அதிகம் அதன் போதனைகளை நம் வாழ்வில் பயிற்சி செய்வோம்.

திறவுகோல் 19

# ஜெபம் (Prayer)

